National Workshop on Art of Writing Research Article in Commerce and Management Research held on 23-24 October, 2010 at Bharathidasan University, Trichy

Organiser: Dr. M. SELVAM

Dinakaran, Tiruchirappalli Edition, Dated: 24.10.2010, Page No.: 12



பேராசிரியர்களின்

பதவி உயர்வுக்கு ஆராய்ச்சி கட்டுரை

பணிப்பட்டறையில் தகவல்

திருச்சி, அக். 24: ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கு ஆராய்ச்சி கட்டுரைகளை அடிப்படை தகுதிகளில் ஒன்றாக பல்கலைக்கழக மானியக் குழு கருதுகிறது என்று பல்கலைக்கழக பணிப்பட்டறையில் தெரிவிக்கப்பட்டது.

பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை சார்பில் வணிகவியல், மேலாண்மையியல் ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதும் கலை குறித்து 2 நாள் பணிப்பட்டறை பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று தொடங்கியது. துணைவேந்தர் மீனா தலைமை வகித்துப் பேசுகையில், ஆராய்ச்சிகளின் தரத்தை மேம்படுத்தும் பொறுப்பு கல்வி நிறுவனங்களிடம் உள்ளது. ஆராய்ச்சி முடிவுகளை இதழ்களில் வெளியிடுவதன் மூலம் நிறைவு பெறும். ஆய்வுக்கட்டுரைகளை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

பணிப்பட்டறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வம் பேசுகையில், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இதழ்களில் வெளியிடுவது தனித்துவம் வாய்ந்தது. ஆனால் இத்திறனை வளர்க்க உரிய அக்கறை செலுத்தப்படவில்லை. பல்கலைக்கழக மானியக்குழு ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கு அடிப்படை தகுதிகளில் ஒன்றாக ஆராய்ச்சி கட்டுரைகளை கருதுகிறது. எனவே ஆய்வு கட்டுரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. வணிகவியல், மேலாண்மையில் எண்ணற்ற ஆராய்ச்சிகள் நடக்கின்றன. ஆனால் அவை உலகத் தரம் வாய்ந்த இதழ்களில் வெளியிடப்படுவதில்லை என்றார்.

பல்கலைக்கழக பதிவாளர் ராமசாமி, ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கோவிந்தசாமி பங்கேற்றனர். தொடர்ந்து வணிகவியல், மேலாண்மைத்துறை பேராசிரியர் சீனிவாச ராகவன், முனைவர் அர்சுணன், பிஎஸ்ஜி நிறுவன உதவி பேராசிரியர் விவேக், பிரசாத் உள்ளிட்ட பேராசிரியர்கள் பல்வேறு தலைப்புகளில் பேசினர். பல்வேறு கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் 200 பேர் பங்கேற்றுள்ளனர். முன்னதாக துறை தலைவர் செல்வம் வரவேற்றார். காயத்திரி நன்றி கூறினார்.

Dailythanthi, Tiruchirappalli Edition, Dated: 25.10.2010, Page No.: 13



அனைத்து ஆராய்ச்சிகளும்

நிஜ வாழ்க்கை சம்பவங்களை ஒட்டியதாக அமைய வேண்டும்

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் பேச்சு

பயிற்சி பட்டறை சிடியை பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் மீனா வெளியிட்ட போது எடுத்த படம்.

Dailythanthi, Tiruchirappalli Edition, Dated: 22.10.2010, Page No.: 16



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில்

ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதுவதற்கு 2 நாட்கள் பயிற்சி

நாளை தொடங்குகிறது

திருச்சி,அக்.22-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதுவதற்கு 2 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி முகாம் நாளை தொடங்குகிறது.

2 நாள் பயிற்சி

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை சார்பில் வணிகவியல் மற்றும் மேலாண்மையியலில் ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதும் கலை என்ற தலைப்பில் 2 நாட்கள் பணிப்பட்டறையை நடத்துகிறது. இந்த பணிப்பட்டறையானது நாளையும் (சனிக்கிழமை), நாளை மறுநாளும் (ஞாயிற்றுக்கிழமை) பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகிறது.

இதில் கட்டுரைகளை எழுதுவதற்கும், வெளியிடுவதற்கும் பயிற்சி அளிக்கப்படும். மேலாண்மை மற்றும் சமூக அறிவியல் ஆராய்ச்சிகளின் தத்துவஞானம் சார்ந்த அடித்தளம் மற்றும் சமூக அறிவியல் ஆராய்ச்சி கட்டுரைகளின் கூறுகள், ஆராய்ச்சி இதழ்களின் இம்பேக்ட் காரணியையும் மேற்கோள் குறியீட்டு எண்ணையும் கணக்கிடுதல், இதழ் ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளும் அவர்கள் ஆராய்ச்சி கட்டுரைகளை ஆராயும் முறைகளும், குறிப்பு மற்றும் எழுதும் பாணி ஆகிய தகவல்கள் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

150 பேராசிரியர்கள்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் கே.மீனா பணிப்பட்டறையை தொடங்கி வைத்து பேசுகிறார். பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் ஸ்ரீதரன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குகிறார். பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளை சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.